Sl. No. of QP : 7555

E-II

Name of the Paper : Skills of Language Use and a Modern Prose Text

Name of the Course : B.A. (Prog.), I Year- Paper-I: Tamil (B)

Semester/ Annual : Annual Mode

Duration : 3 Hours

Maximum Marks : 100

1. ஏதேனும் ஒரு தலைப்பில் சிறு கட்டுரை (150 சொற்கள் ) *ஒன்று* வரைக: 20

அ. குழந்தைத் திருமணம்

ஆ. புலிகள் பாதுகாப்பு

இ. கணினிக் கல்வியின் இன்றியமையாமை

2. கீழ்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து வினவப்பட்டிருக்கும் வினாக்களுக்கு உரிய விடை தருக: 20

தென்னிந்தியாவின் கீழக்கரைப் பகுதிகளில் வேம்பு ஏப்பிரல் (சித்திரை) மாதம் மலரத் தொடங்குகிறது. அதன் நறுமணம் உயிர்களின் காம வேட்கையையும் களிப்பையும் எழுப்புகிறது. புத்தர் ஞானம் பெற்றது அரச மரமாகும். இந்துக்கள் அரச மரத்தை 'விருகடி ராஜா' என்று அழைக்கின்றனர். தமிழ் நாட்டில் அரச மரமாகிய வேந்தனுக்கு வேப்ப மரமாகிய மணவாட்டியைத் திருமணம் செய்து வைக்கும் சடங்கு ஒன்று உண்டு. திருமணமான இந்தத் தம்பதியைச் சோம வார (திங்கள் கிழமை) அமாவாசை அன்று காலையில் 108 முறை சுற்றுவோருக்கு நல்ல மங்களகரமான விருப்பங்கள் நிறைவேறுகின்றன என்றும் மகப்பேறு கிடைக்கிறது என்றும் இந்துக்கள் நம்புகிறார்கள். அரசும் வேம்பும் ஒரு கல்லுக்கட்டில் இணைந்து காட்சி தருவதைத் தமிழ் நாட்டின் பல இடங்களில் காணலாம்.

கேள்விகள்:

அ. எவ்விடத்து வேம்பு மலர்கின்றது?

ஆ. 'விருகடி ராஜா' என அழைக்கப்படும் மரம் எது?

இ. மரங்களுக்கு நடைபெறும் திருமணத்தில் மணமக்கள் யாவர்?

ஈ. மகப்பேற்றுக்காக வேம்பு, அரச மரங்களை எப்போது சுற்ற வேண்டும்?

உ. மேற்கண்ட பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தந்து, மையக்கருத்தைச் சுருக்கிக் கூறுக.

10

3. பிழை திருத்துக

அ. பவனந்தி முனிவர்

ஆ. இலங்கோ அடிகள்

இ. சீத்தளைச் சாத்தனார்

ஈ. நச்சிணார்க்கினியர்

உ. பரிமேளழகர்

4. பல பொருள் ஒரு சொல் என்றால் என்ன? சான்றுகள் தந்து விளக்குக. 10

(அல்லது)

ஒரு பொருள் குறித்த பல சொற்கள் மொழியில் பெறும் இடத்தினைச் சான்றுகளுடன் விளக்குக.

5. *இலைகள் சிரித்தன* என்ற சிறுகதையை மதிப்பிடுக. 20

(அல்லது)

*பள்ளத்தெரு* என்னும் சிறுகதையில் சாதிய முரண்பாடுகளை விளக்குக.

6. *வேட்கை* (அல்லது) *வீடு* என்ற சிறுகதையில் வரும் பாத்திரங்களை ஆராய்க. 20